# தமிழர் நினைவேந்தல் அகவம் - சுவிஸ்
## Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil
www.maveerarnaal.ch trfswiss@gmail.com


# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவாக நடாத்தப்பெறும் பேச்சுப்போட்டி 2019

**8 வயதுப்பிரிவு**
(01.01.2011 – 31.12.2011 வரையில் பிறந்தோர்)

## பன்னாட்டு சிறுவர் நாள்

இன்றைய சிறுவர்கள் நாளைய வழிகாட்டிகள். அவர்களின் தேவைகளை நிறைவாக்கி, நல்வழிகாட்டி, வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பு வையகத்தில் வாழும் வளர்ந்தவர்களின் தலையாய கடமையாகும்.

பதினெட்டு வயதுக்கு உட்பட்ட அனைவரையும் 'சிறுவர்' என்று ஐக்கிய நாடுகள் சபை வரையறை செய்கிறது. அத்தோடு, 'யுனிசெப்' என்ற சிறுவர் நிதியத்தை உருவாக்கி, சிறுவர் உரிமைகளைப் பேணுதலையும், அவர்களுக்கான நல்வாழ்வையும் உறுதிப்படுத்துகிறது. அதுமட்டுமன்றி, ஆண்டுதோறும் ஒக்டோபர் திங்கள் முதலாம் நாளை பன்னாட்டுச் சிறுவர் நாளாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

ஆனாலும், வையகத்தின் பல நாடுகளில் சிறுவர்களின் ஆதரவற்ற நிலை, குழந்தைப் பணியாளர், சிறுவர் துன்புறுத்தல் போன்ற சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள் இன்னமும் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. இதற்கு நாடுகளுக்கு இடையே நடைபெறும் போர்கள், வறுமை, கல்வியறிவின்மை, விழிப்புணர்வின்மை போன்ற விடயங்கள் காரணங்களாகக் கூறப்பெறுகின்றன.

எமது தாயக மீட்புப் போர்க்காலத்தில் எதிரிப்படைகளின் தாக்குதல்களால் பாதிக்கப்பட்டு உணவுக்காகவும், கல்வி கற்பதற்காகவும் அல்லற்படும் குழந்தைகள் பலர் உள்ளனர். அவர்களுக்கு உதவவேண்டிய பொறுப்பு எமதாகும்.

இதனைக் கருத்தில் கொண்டு தமிழ்க் கல்விச்சேவையினால் கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பன்னாட்டு சிறுவர் நாளை முன்னிட்டு, தமிழ்ப் பள்ளிகளிலே கல்வி கற்றுவரும் மாணவர்கள் ஊடாக நிதி சேகரிப்பு அட்டை அறிமுகப்படுத்தப்பெற்றது. அவ்வாறு சேகரிக்கப்பெற்ற நிதி தாயகத்தில் வாழும் மாணவர்களின் கல்விக்காகப் பயன்படுத்தப்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தாயகத்தில் போர் நடைபெற்ற போதே, அங்கு வாழ்கின்ற அத்தனை குழந்தைகளின் உரிமைகளையும் பாதுகாத்து எமக்கெல்லாம் வழிகாட்டியவர் எங்கள் தலைவர் மாமா. ஆதலால், நாமும் தாயகத்தில் வாழும் எம்மைப் போன்ற சிறுவர்களின் நல்வாழ்வுக்கு உதவுவோம்.

நன்றி,
வணக்கம்.